13 செப்டம்பர், 2026

**பொதுக்காலம் 24-ஆம் ஞாயிறு**

**விவிலிய வாசகங்கள்**

சீராக் 27:30–28:7; உரோ 14:7–9; மத்தேயு 18:21–35

"கடவுள் நம்மை மன்னிப்பது போல, நாமும் ஒருவரையொருவர் மன்னிக்க வேண்டும்."

**முன்னுரை**

ஒரு ஆசிரியர் தம் மாணவர்களிடம், "நீங்கள் யாரையெல்லாம் மன்னிக்க மறுக்கிறீர்களோ, அவர்கள் ஒவ்வொருவருக்காகவும் ஆளுக்கு ஒரு உருளைக்கிழங்கை ஒரு பையில் போட்டு சுமந்து வாருங்கள்" என்றார்.

சில நாட்களுக்குப் பிறகு, அந்த உருளைக்கிழங்குகள் அழுகத் தொடங்கின. அவற்றின் துர்நாற்றம் தாங்க முடியாமல் குழந்தைகள் முறையிட்டனர்.

அப்போது ஆசிரியர் அமைதியாக, "மன்னிக்காத இருதயம் இப்படித்தான் அழுகிப்போகும்" என்றார்.

இன்றைய நற்செய்தியில் பேதுரு இயேசுவிடம், "நான் என் சகோதரனை எத்தனை முறை மன்னிக்க வேண்டும்?" என்று கேட்கிறார். இயேசு அதற்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையைக் கூறாமல், "ஏழு எழுபது முறை" என வாழ்நாள் முழுமைக்குமான வழிமுறையாகப் பதிலளிக்கிறார்.

நம் மீது கடவுள் காட்டும் இரக்கத்திற்கு எல்லையே இல்லை; அந்த இரக்கம் மற்றவர்களுக்கும் நம் வழியே பாய வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.

நாம் பல நேரங்களில் பழைய காயங்களை வருட கணக்கில் சுமந்து திரிகிறோம். கசப்பு, பெருமை, வன்மம் ஆகியவற்றால் நம்மையே சிறைப்படுத்திக் கொள்கிறோம். ஆனால் மன்னிப்பு என்பது பலவீனம் அல்ல; அதுதான் உண்மையான விடுதலை. கடவுள் நம் கடனைத் தள்ளிப்போடவில்லை, கிறிஸ்து வழியாக அதை முழுமையாகத் தள்ளுபடி செய்கிறார்.

இந்தத் திருப்பலியில் பங்கேற்கும் நாம், நம் இதயத்தைக் கோபம் மற்றும் கசப்பிலிருந்து விடுவித்து, உண்மையான மனமாற்றத்தோடு இறைவனின் புனித மறைநிகழ்வுகளைக் கொண்டாட அருள் வேண்டுவோம்.

**மறையுரை**

ஒரு சிறுவன் தன் குடும்பத்தில் தன் தந்தைக்கும் பாட்டிக்கும் இடையே ஏற்பட்ட சண்டைக்குப் பிறகு, தன் பாட்டிக்கு ஒரு கடிதம் எழுதினான்:

"பாட்டி, நீங்களும் அப்பாவும் ஒருவர் மீது ஒருவர் கோபமாக இருப்பது எனக்குத் தெரியும். ஆனால் கிறிஸ்துமஸ் வரப்போகிறது.

தயவுசெய்து நான் எந்த வீட்டிற்கு வர வேண்டும் என்று என்னைத் தேர்ந்தெடுக்கச் சொல்லாதீர்கள்." என்று ஒரு கடிதம் எழுதினான்.

அக்கடிதத்தைப் படித்த பாட்டி கண் கலங்கினார். இரு பெரியவர்கள் தங்கள் பெருமையையும் கசப்பையும் அன்பை விடப் பெரிதாக நினைத்துவிட்டதை உணர்ந்தனர். அந்தச் சிறு குழந்தையின் வார்த்தை, பிரிந்த குடும்பத்தைச் சேர்த்த பாலமாக மாறியது.

இயேசு இன்றைக்குப் பேசுவதும் இதுபோன்ற ஒரு உலகில்தான் கோபம், மனக்காயம், பெருமை, கசப்பு மற்றும் முறிந்த உறவுகளால் காயப்பட்ட உலகத்தில்!

பேதுரு இயேசுவிடம் மிகத் தாராள மனப்பான்மையோடு கேட்பதாக நினைத்துக்கொண்டு, "ஆண்டவரே, என் சகோதரர் எனக்கு எதிராகப் பாவம் செய்தால் நான் எத்தனை முறை மன்னிக்க வேண்டும்? ஏழு முறையா?" என்று கேட்கிறார். யூதப் பாரம்பரியத்தில் 'ஏழு' என்பது முழுமையான எண். பேதுரு தன் எல்லையைத் தாண்டி யோசிக்கிறார்.

ஆனால் இயேசு அந்த எல்லையை உடைத்தெறிகிறார்: "ஏழு முறை மட்டுமல்ல, ஏழு எழுபது முறை." அதாவது, மன்னிப்பு என்பது கணக்கு வழக்குப் பார்ப்பதோ, கணிப்பொறி போலக் கணக்கிடுவதோ அல்ல; அது ஒரு வாழ்க்கை முறை!

இந்த போதனையை நடைமுறைப்படுத்துவது எவ்வளவு கடினம் என்பதை இயேசு அறிந்திருந்ததால், ஒரு உவமையைக் கூறுகிறார்.

**ஈடுசெய்ய முடியாத கடன்**

ஒரு பணியாளன் தன் அரசருக்குப் 'பத்தாயிரம் தாலந்து' கடன்பட்டிருந்தான். இன்றைய மதிப்பில் அது பல கோடிக்கணக்கான ரூபாய் — எவராலும் அடைக்க முடியாத ஒரு மிகப்பெரிய தொகை.

அந்தப் பணியாளன் மண்டியிட்டு, "என்னைப் பொறுத்துக்கொள்ளுங்கள், எல்லாவற்றையும் செலுத்திவிடுகிறேன்" என்று கெஞ்சுகிறான். ஆனால், அந்தத் தொகையை எவராலும் திருப்பிக் கொடுக்க முடியாது என்பது அதைக்கேட்ட அனைவருக்கும் தெரியும்.

அப்போது அந்த உவமையில் ஒரு அதிர்ச்சியூட்டும் திருப்புமுனை ஏற்படுகிறது.

அரசர் கடனை அடைக்க அவகாசம் மட்டும் தரவில்லை; மாறாக, அந்தக் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்து அவனை விடுவிக்கிறார்!

நீதியை விட இரக்கம் வெல்கிறது!

கடவுள் நம்மை நடத்தும் விதமும் இதுவே.

நாம் பல நேரங்களில் கடவுளை நம் தவறுகளைக் கணக்கெடுக்கும் ஒரு கணக்காளராக நினைக்கிறோம். ஆனால் இயேசுவோ, மனித கணக்குகளுக்கு அப்பாற்பட்ட இரக்கம் கொண்ட இறைவனை நமக்குக் காட்டுகிறார். கடவுள் நம்மைச் சகித்துக்கொள்வதோடு நிறுத்துவதில்லை; நமக்கு ஒரு புதிய வாழ்வைத் தருகிறார்.

நீதிமானாக வாழும் எவரும் தண்டனை அடைவதில்லை; அவர்களுக்கு முழுமையான கடன் தள்ளுபடி கிடைக்கிறது. இதுவே கிறிஸ்தவத்தின் இதயம்.

இயேசுவின் வாழ்வைப் பார்க்கும்போது, இந்த இரக்கத்தை நாம் எங்கும் காணலாம்:

விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை சட்ட விதிகளின் படி கல்லெறிந்து கொல்லக் கூட்டம் தயாராக இருந்தது. ஆனால் இயேசுவோ, "அந்தக்  கூட்டத்திடம் உங்களுள் பாவம் செய்யாதவன் முதல் கல்லை எறிய அறிவுறுத்துகிறார் அனைவரும் சென்று விடுகிறார்கள்.உடனே இயேசு நானும் உனக்குத் தண்டனை விதிக்கவில்லை; போ, இனிப் பாவம் செய்யாதே" என்கிறார்.

பாவியான ஒரு பெண் இயேசுவின் பாதங்களைக் கண்ணீரால் கழுவுகிறாள். பரிசேயனாகிய சீமோன் அவளைத் தூற்றுகிறான். ஆனால் இயேசு அவளது பாவத்தை மட்டும் பார்க்கவில்லை; அவளது காயப்பட்ட இதயத்தையும் அன்பையும் பார்க்கிறார். அவளுக்கு நல்வாழ்வையும் கண்ணியத்தையும் மீட்டுக் கொடுக்கிறார்.

பேதுரு தான் இயேசுவைக் கைவிடமாட்டேன் எனப் பெருமை பேசுகிறார் ஆனால் சில மணிநேரங்களிலேயே அவரைத் தெரியாது என மூன்று முறை மறுதலிக்கிறார் இயேசு அவரை வெறுப்போடு பார்க்கவில்லை; அன்போடு பார்க்கிறார். அந்தப் பார்வையில் பேதுரு மன்னிப்பை உணர்ந்து, வெளியே சென்று கதறி அழுகிறார்

திருச்சபையை பல வழிகளில் துன்புறுத்திய பவுல் கூட, "தகுதியற்ற என்னை இறைவன் அழைத்தார்" என்று ஆச்சரியத்தோடு கூறி, தன் வாழ்நாள் முழுவதையும் இறை இரக்கத்தைப் பறைசாற்றச் செலவிட்டார்.

சகோதர சகோதரிகளே, நாம் அனைவருமே அந்த இறை இரக்கத்திற்குத் தாகமாயிருக்கிறோம்.  இன்றைய உலகில் சிலர் பாவத்தை மிகச் சிறியதாக எண்ணுகிறார்கள். ஆனால் ஆழமாகப் பார்த்தால், நாம் ஒருவருக்கொருவர் காயப்படுத்திக்கொள்கிறோம், இறைவனுக்கும் துரோகம் செய்கிறோம் என்பதை மறுக்க முடியாது. இருப்பினும், நற்செய்தி நமக்கு உறுதியளிக்கிறது: கடவுளின் இரக்கத்தை விடப் பெரிய பாவம் எதுவும் இல்லை.

மன்னிப்பு எளிதானதல்ல, ஆனால், இப்போதுதான் கடினமான பகுதி வருகிறது.

கடவுளிடமிருந்து மன்னிப்பைப் பெறுவது எளிது; ஆனால், மற்றவர்களுக்கு அந்த மன்னிப்பைக் கொடுப்பது மிகக் கடினம்.

"மன்னிக்க வேண்டிய நபர் எதிரில் வரும் வரை, மன்னிப்பு என்பது ஒரு அழகான கருத்தாக்கம் மட்டுமே."

சில காயங்கள் மிக ஆழமானவை. துரோகம், வன்முறை, நிராகரிப்பு, அவமானம், நம்பிக்கையின்மை துரோகம் போன்றவற்றைச் சிலர் பல ஆண்டுகளாக பலவாறு சுமந்து திரிகிறார்கள். சில நேரங்களில் தவறு செய்தவர் மன்னிப்புக் கேட்பதே இல்லை; வருந்துவதும் இல்லை.

இன்றைய முதல் வாசகத்தில் சீராக்கின் நூல், கோபம், வன்மம், பழிவாங்குதல் மற்றும் மற்றவர்களின் பாவங்களை நினைவில் வைத்திருத்தல் பற்றிப் பேசுகிறது. உணர்ச்சிகள் இயல்பானவைதான். இயேசு கூடக் கோபப்பட்டார் — அநீதியைக் கண்டபோதும், திருக்கோவில் சந்தையாக மாற்றப்பட்டபோதும் அவர் கோபமடைந்தார்.

ஆனால், தற்காலிகக் கோபத்திற்கும், மனதிற்குள் வளர்க்கப்படும் வன்மத்திற்கும் வித்தியாசம் உண்டு. கோபப்படுவது தவறில்லை; ஆனால் அந்த கோபத்தைத் தாலாட்டி, வளர்த்து, நம் அடையாளமாகவே மாற்றுவதுதான் ஆபத்தானது.

அப்படி நடக்கும்போது, கோபம் நஞ்சாக மாறுகிறது.

இதற்கு இன்றைய நவீன உதாரணம்: சாலையில் ஏற்படும் கோபம்.

சிறிய தவறுக்குக் கூட ஆட்களைத் திட்டுவதும், வன்முறையில் இறங்குவதும் நடக்கிறது. தவறை விட அவர்களின் எதிர்வினை பெரிதாக இருக்கிறது. ஏன்? ஏனெனில் அந்தக் கோபம் சாலையில் தொடங்கவில்லை; ஏற்கனவே மனதிற்குள் கொதித்துக் கொண்டிருந்தது வெளியே வெடிக்கிறது.

மன்னிப்பின்மை மற்றவர்களை மட்டுமல்ல, முதலாவதாக நம்மையே அழிக்கிறது.

இன்றைய நற்செய்தியில், மன்னிக்காத பணியாளன் "சித்திரவதை செய்வோரிடம்" ஒப்படைக்கப்பட்டான் என்று இயேசு கூறுகிறார்.

யார் அந்தச் சித்திரவதையாளர்கள்?

மனதிற்குள் இருக்கும் கசப்பு, நஞ்சு, மகிழ்ச்சியின்மை மற்றும் மன்னிப்பு வழங்க மறுப்பதால் நமக்கு நாமே அமைத்துக்கொள்ளும் சிறைக்கூடம்தான் அந்தச் சித்திரவதையாளர்கள்.

ஜெர்மனியில் நடந்த ஒரு சம்பவம்: இரண்டு விவசாயக் குடும்பங்களுக்கு இடையே நிலப் பிரச்சினை காரணமாக தலைமுறை தலைமுறையாகப்

பேச்சுவார்த்தை இல்லை. காரணம் என்னவென்றே யாருக்கும் நினைவில்லை.

ஒருநாள், ஒரு குடும்பத்தில் திருமணம் நடந்தபோது, மணப்பெண் எதிர்க் குடும்ப வீட்டிற்குச் சென்று, "பழைய சண்டையை மறந்துவிட்டு எங்களுடன் வந்து கொண்டாடுங்கள்" என்று அழைத்தார். ஆனால், பெருமை அவர்களைத் தடுத்தது.

அக்கம்பக்கத்தில் இசை, நடனம், சிரிப்பொலியுடன் திருமணம் கோலாகலமாக நடந்தபோது, இந்த குடும்பத்தினர் மட்டும் வீட்டிற்குள் அடைபட்டு அமைதியாக அமர்ந்திருந்தனர். அவர்களின் சொந்தப் பெருமையே அவர்களைச் சிறைப்படுத்தியது.

இன்றைக்குப் பல குடும்பங்கள் இப்படித்தான் வாழ்கின்றன:

"சாரி" என்று சொல்ல மனமில்லாமல் கணவன்-மனைவி பேசாமல் இருக்கிறார்கள்.

பிள்ளைகள் பெற்றோரை விட்டு விலகுகிறார்கள்.

சிறு தவறுகளால் நண்பர்கள் பிரிந்து போகிறார்கள்.

ஏதோ ஒரு கசப்பான அனுபவத்தால் பலர் திருச்சபையை விட்டே விலகுகிறார்கள்.

முறிந்த உறவுகளுக்குப் பின்னால் இருக்கும் ஒரே சோகம்: மன்னிக்கும் மனமின்மை.

அதே நேரம், மன்னிப்பது ஒரே நாளில் நடக்கும் மாயாஜாலம் அல்ல; அதற்குக் காலம் தேவைப்படும். காயம் ஆழமாக இருந்தால், குணமடையவும் நேரம் எடுக்கும்.

இன்றைய உவமையில் இரண்டு பணியாளர்களுமே, "எனக்கு அவகாசம் தாரும்" என்று கேட்கிறார்கள்.

நம்மிடம் மற்றவர்கள் அமைதியாகக் கேட்பதும் அதைத்தானே?

"நான் மாறுவதற்கு எனக்குக் கொஞ்சம் காலம் கொடு."

"என் காயங்கள் ஆற எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடு."

நாம் மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மிகப்பெரிய கொடை — அவர்களுக்குக் கொஞ்சம் 'கால அவகாசம்' தருவதுதான்.

**சிறுவனின் பாடம்**

ஒரு சிறுவன் விளையாட்டில் தோற்பதை விரும்புவதில்லை. ஒருநாள் ஆட்டத்தில் தோற்ற கடுப்பில், ஆட்டக் காய்களை எல்லாம் தூக்கி எறிந்து விளையாட்டைப் பாழாக்கினான். அவனுடைய அப்பா அவனுக்கு தண்டனையாக அவனை மாடி அறைக்கு அனுப்பிவிட்டார்.

அவன் கோபத்தோடு அறையில் அமர்ந்திருந்தபோது, கீழே உள்ளவர்கள் சிரித்துப் பேசி விளையாட்டைத் தொடர்வதைக் கேட்டான். பிற்காலத்தில் அவன் சொன்னான்: "நான் அவர்கள் மீது கோபப்படவில்லை, என் மீதே கோபப்பட்டேன். கீழே சென்று 'மன்னித்து விடுங்கள்' என்று ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம், ஆனால் என் பெருமை அதைத் தடுத்தது."

எத்தனை பேர் இன்றைக்குச் சிறிய வார்த்தையான "மன்னித்துவிடு" என்று சொல்ல முடியாமல் பெருமை என்ற சிறையில் சிக்கியிருக்கிறார்கள்!

கடவுள் நம்மை நடத்தும் விதம் இன்றைய நற்செய்தியின் மைய உண்மை இதுதான்:

கடவுள் நம்மை நீதியின்படி மட்டும் நடத்துவதில்லை; மாறாக இரக்கத்தினால் நடத்துகிறார்.

கடவுள் நீதியின்படி மட்டுமே நம்மைத் தீர்ப்பிட்டால் நம்மிடையேயார் நிலைத்து நிற்க முடியும்?

புனித பவுல் அடிகளார் கூறுவது போல: "நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காக இறந்தார்." நாம் யோக்கியமானவர்களாக மாறும் வரை கடவுள் காத்திருக்கவில்லை.

அதனால்தான் ஒவ்வொரு திருப்பலியிலும், "உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் ஆட்டுக்குட்டி இவரே" என்று இயேசுவை நமக்குச் சுட்டிக்காட்டுகிறோம்.

இறைவன் நம்மை இப்படி மன்னிக்கிறார் என்றால், நாமும் ஒருவரையொருவர் அப்படியே நடத்த வேண்டும்.

"நீ எனக்கு என்ன செய்தாயோ, அதை நானும் உனக்குச் செய்வேன்" என்பதல்ல;

"கடவுள் எனக்கு எப்படி இரக்கம் காட்டினாரோ, அப்படியே நானும் உனக்குச் செய்வேன்" என்பதே கிறிஸ்தவ வாழ்வு.

**முடிவுரை**

ஸ்பெயின் உள்நாட்டுப் போரின் போது, பாகோ என்ற இளைஞன் தன் தந்தையோடு சண்டையிட்டு வீட்டை விட்டு ஓடிவிட்டான். தந்தை எங்குத் தேடியும் அவன் கிடைக்கவில்லை. இறுதியாகத் தந்தை நாளிதழில் ஒரு விளம்பரம் கொடுத்தார்:

"பாகோ, உன் செயல்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டுவிட்டது. நாளை நண்பகல் செய்தித்தாள் அலுவலகம் முன் என்னை வந்து பார். — இப்படிக்கு உனது தந்தை."

மறுநாள் நண்பகலில், 'பாகோ' என்ற பெயர் கொண்ட 800-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அங்கு வந்து காத்திருந்தனர்!

ஏனெனில், ஒவ்வொரு மனித இதயத்தின் ஆழத்திலும் மன்னிப்பு பெற வேண்டும் என்ற ஏக்கம் இருக்கிறது!

இன்று இயேசு நமக்கு நினைவூட்டுகிறார்: மன்னிப்பு என்பது பலவீனம் அல்ல, அது விடுதலை! அது பாவியையும் விடுவிக்கிறது, காயப்பட்டவரையும் விடுவிக்கிறது.

எனவே, பழிவாங்கும் குணத்தோடு வாழாமல், இறைவனின் இரக்கத்தைப் பெற்று வாழும் வரத்தைக் கேட்போம்.

நம் வாழ்வு இனிச் சொல்லட்டும்: "நீ எனக்குச் செய்தபடி நான் உனக்குச் செய்வேன்" என்பதல்ல, "இறைவன் என்னை மன்னித்தது போல, நானும் உன்னை மன்னிக்கிறேன்!" என்பதே.

ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai